**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி.க. இந்துமதி, கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.** 133/2019 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஜெயராமன் | **வயது** | : | 65 |
| **த.பெ** | : | தங்கவேல் | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | ஆத்துவாம்பாடி | **தொழில்** | : | விவசாயம் |

**12.08.2025 – வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் ஏற்கனவே பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்து விவரங்களும் உண்மை.

கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 06.03.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. ஆத்துவாம்பாடி கிராமத்தில் என் பெயரில் உள்ள பட்டா எண்.216 நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 19.11.2018 தேதியிட்ட என் பெயரில் உள்ள 1428 பசலி வருடத்திற்கான அடங்கல் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்களை குறியீடு செய்து இந்த வழக்கை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதல் விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-B.Salma,
District Munsif,
Polur.